"சந்திரபிரபு ஜெயின் கல்லூரியில் குறைந்த கல்வி கட்டணத்துடன் புத்தகங்கள் இலவச வினியோகம்"

சென்னை, செப்.16

"சந்திரபிரபு அறக்கட்டளை நிர்வகிக்கும் மகத்தான கல்லூரியாக, சந்திரபிரபு ஜெயின் கலை விஞ்ஞான கல்லூரி சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறது. சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துங்கள். அப்படிப் பயன்படுத்தினால் சூரியனாக பிரகாசிக்கலாம்" என்று கல்லூரி பிரின்சிபல் என்.நாகஜோதி தெரிவித்தார்.

இந்தக் கல்லூரி 23 ஆண்டுக்கும் மேலாக சிறந்த மாணவ மாணவிகளை உருவாக்கும் பணியை சேவை நோக்கத்துடன் செயல்பட்டது. மிகச்சிறந்த ஆசிரியர்கள், சிறப்பான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இயற்கை எழில் கொஞ்சும் சூழ்நிலையில் கல்வியையும் வழங்கிவருகிறது. கல்லூரியின் உட்புற கட்டமைப்பு வசதி, தரமான ஆய்வுக்கூடங்கள், நூலகம், கருத்தரங்க அவை மற்றும் விளையாட்டு திடல்களைக் கொண்டுள்ளது என்றார் நாகஜோதி.

மீஞ்சூரில் சிறந்த உயர் கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரியில் மிக குறைந்த கல்வி கட்டணம், பாடப்புத்தகங்கள் கட்டணம் ஏதும் இல்லாமல் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இக்கல்லூரியின் மேலாண்மை மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழகத் தேர்வுகளில் முதல் நிலை பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கமும், ரூ.10 ஆயிரமும் வழங்கிவருகிறது. விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கமளித்து அகில இந்திய விளையாட்டு போட்டிகளில் பங்கு பெற பெரும்பங்கு ஆற்றுகிறது. மேலும் மத்திய – மாநில அரசுகள் வழங்கும் உதவித்தொகை தகுதியுள்ள மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

சிறந்த காற்றோட்டமான அறை, பசுமையான சூழல், சிறந்த உணவகம்கள், இளங்கலை, இளம் அறிவியல், முதுகலை அறிவியல், முதுகலை வணிகவியல் ஆகிய பாடங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தாளாளர் மற்றும் செயலர் லலித் குமார் ஒ.ஜெயின் பேசுகையில், 1997ல் துவங்கப்பட்டு சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கான கல்வித் துறையில் நிர்வாகம் தரமான கல்வியையும் தேவை அடிப்படையிலான கல்வியையும் அளித்து வருகிறோம். 23 ஆண்டுகளில் மகத்தான வளர்ச்சி கண்டுள்ளது. 100 ஊழியர்களையும், 1500 மாணவ மாணவிகளையும் கொண்டுள்ளது என்றார்.

2014–15 ஆண்டு முதல் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பிஎஸ்சி படிப்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் அதிக மதிப்பெண் எடுத்து உயர்ந்த இடம் பிடிக்கும் மாணவ மாணவிகளுக்கு அறிமுகப்படுத்திய இலவச கல்வி திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. தடகளப் போட்டிகளில் மாணவ மாணவிகளை உடற்பயிற்சி கல்வித்துறை தயார்படுத்தி வருகிறது. தனித்தன்மை வாய்ந்த எங்களின் புத்தக வங்கி திட்டம் மூலம் மாணவ மாணவிகள் பயனடைகிறார்கள். சிறந்த கல்வி அறிவு ஊட்டுவதிலும் சமூகத்தில் பொறுப்பான பிரஜைகளாக மாணவ மாணவிகளை உருவாக்குவதிலும் இக்கல்லூரியின் இலக்காகும். எங்களது தொலைநோக்குப் பார்வை செயல் திட்டத்தை வெற்றிகரமாக எட்டிப்பிடிக்க கல்லூரியின் வழிமுறைகள் கட்டுப்பாடுகளை மாணவ மாணவிகள் அனைவரும் அனுசரித்து நடக்க வேண்டும் என்றும் லலித் குமார் ஒ.ஜெயின் தெரிவித்தார்.

போளூரில் இளைஞர் பாசறை ஆலோசனை கூட்டம்: மாவட்டச் செயலாளர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி துவக்கினார்

போளூர். செப்.16–

அண்ணா தி.மு.க. கிளை நிர்வாகிகளுக்கு முதல் கட்டமாக ரூ 5 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அவர்களுக்கு கவனிப்பு காத்திருக்கிறது என போளூரில் நடந்த இளைஞர் பாசறை ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அக்ரிஎஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் போளூர் ஒன்றிய அண்ணா தி.மு.க. சார்பில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மூலம் பூத் வாரியாக நிர்வாகிகள் நியமனம் செய்வது குறித்த சிறப்பு ஆலோசனை கூட்டம் நடந்தது. ஒன்றிய செயலாளர் எல். ஜெயசுதாலட்சுமிகாந்தன் வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆவின் தலைவரும், தெற்கு மாவட்ட செயலாளருமான அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு இளைஞர் பாசறை மூலம் பூத் கமிட்டி நிர்வாகிகள் நியமனம் செய்வதற்கான படிவங்களை அந்தந்த கிளை நிர்வாகிகளிடம் வழங்கி பேசியதாவது:–

அண்ணா தி.மு.க. என்ற கட்சி நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல. எம்.ஜி.ஆர் என்ற மாபெரும் தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சி. பல வரலாறுகளும் தியாகங்களும் உள்ளடக்கிய கட்சி. இந்த கட்சியை மறைந்த முதல்வர் ஜெயலலிதா இந்தியாவிலேயே 3–வது பெரிய கட்சியாக உருவாக்கி காட்டினார். என் காலத்திற்கு பிறகும் 100 ஆண்டுகள் ஆட்சி செய்யும் என அவர் சொன்ன வைரவரிகளுக்கு எடுத்து காட்டாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி செயல்பட்டு வருகிறார். எந்த பிரதி பலனையும் எதிர்பார்க்காத சாதாரண தொண்டர்களின் வியர்வையால் தான் இந்த கட்சி இந்தளவிற்கு வளர்ந்துள்ளது. எனவே அண்ணா தி.மு.க.வின் கோட்டையாக விளங்கி வரும் போளூர் சட்டமன்ற தொகுதியை நாம் மீண்டும் கைப்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர்கள் எம். சின்னதம்பி, கே.ராஜசேகர், எஸ். கே.ராமமூர்த்தி, ஆர்.சசிக்குமார், எம். ஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர்கள் அ.கோட்டீஸ்வரி அசோகன், அ.அன்புக்கரசிராஜேந்திரன், சி.பெரியசாமி கு.யாசின், போளூர் நகர செயலாளர் கோ.பாண்டுரங்கன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அண்ணாவின் 112 வது பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அண்ணா சிலைக்கு வி.ஐ.டி துணைத்தலைவர் சங்கர் விசுவநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இணை துணை வேந்தர் எஸ். நாராயணன், பதிவாளர் டாக்டர்.கே.சத்திய நாராயணன், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளனர்.

FIRST FINANCIAL SERVICES LIMITED

CIN: L85100TN1984PLC011231

Regd Office: 52, 53, 1st Floor, Diamond Block, Cenchi Main Road, Sri Krishna Vatika Appt, Puzhal Chennai 600066

Contact no. 9176883755 Email: firstfinancialservices1@gmail.com Website: www.ffslonline.com

UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR TO DATE ENDED 30.06.2020

(Rs. in Lacs)

	Unaudited Results for the quarter ended 30.06.2020	Year to date financial results for for period ended on 30.06.2020	Unaudited financial results for the quarter ended 30.06.2019
Total Income from operations (net)	14.18	14.18	10.74
Net Profit / (Loss) from ordinary activities after tax	43.50	43.50	(45.31)
Net Profit / (Loss) for the period after tax (after Extraordinary items)	43.50	43.50	(45.31)
Equity Share Capital	807.48	807.48	807.48
Reserves (excluding Revaluation Reserve as shown in the Balance Sheet of previous year)	-	-	-
Earnings Per Share (before extraordinary items) (Equity Shares of Rs. 10/- each)			
Basic:	0.05	0.05	(0.06)
Diluted:	0.05	0.05	(0.06)
Earnings Per Share (after extraordinary items) (Equity Shares of Rs. 10/- each)			
Basic:	0.05	0.05	(0.06)
Diluted:	0.05	0.05	(0.06)

Note: 1) The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the website of Stock Exchange and the listed entity (www.bseindia.com) and (www.ffslonline.com) respectively.

2) The company has adopted Indian Accounting Standards (Ind As) from 1st April, 2017. Accordingly, financial results for the quarter ended 30th June, 2020 have been prepared following the IND-AS recognition and measurement principles. Financial results for the quarter ended 30th June, 2019 have been restated based on IND-AS principles.

For First Financial Services Limited

Sd/-

Nirmal Singh Merlia

Whole Time Director

DIN- 03584434

Place: Mumbai

Date: 15/09/2020

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018.

Tel.: +91-44-2499 1992 • Fax: +91-44-2499 4922 | Email id: eslinvestors@essar.com | CIN No.: L65990TN2005PLC071791

30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(₹லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
	30.06.2020	31.03.2020	30.06.2019	31.03.2020
	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை யானது
செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	-	-	-	-
வரி, விலக்கு அயிட்டத்திற்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்)	(6.98)	(2.21)	(2.26)	(17.03)
வரிக்கு முன் மற்றும் விலக்கு அயிட்டத்திற்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்)	(6.98)	(2.21)	(2.26)	(17.03)
வரி, விலக்கு அயிட்டத்திற்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்)	(6.98)	(3.79)	(2.26)	(18.61)
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம்)	(6.98)	(3.79)	(2.26)	(18.61)
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–)	1,428.78	1,428.78	1,428.78	1,428.78
இதர ஈக்விட்டி – (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)				(1,350.15)
ஒரு பங்கு சம்பாத்தியம் (அடிப்படை) (₹)	(0.05)	(0.03)	(0.02)	(0.13)
ஒரு பங்கு சம்பாத்தியம் (டைலூட்டட்) (₹)	(0.05)	(0.03)	(0.02)	(0.13)
(*வருடாந்திரமல்ல)				

குறிப்பு

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 14.09.2020 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சு இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.essar.com–ல் உள்ளது.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக

ஒப்பம்/–

சோமசேகர் B. மலலி

இயக்குனர்

DIN: 07626139

தேதி: 14.09.2020

இடம்: மும்பை

அரசு ஐடிஐக்களில் விண்ணப்பிக்க நாளை வரை கால அவகாசம்

சென்னை, செப். 16–

அரசு ஐடிஐக்களில் விண்ணப்பிக்க செப்டம்பர் 17–ந்தேதி (நாளை) வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் வே.விஷ்ணு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் (ஐடிஐ) அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 2020ம் ஆண்டுக்கான சேர்க்கை விண்ணப் பங்கள் www.skilltraining.gov.in என்ற இணையதளம் வாயிலாக பெறப்படுகின்றன. விண்ணப்பிக்க கடைசி நாளாக செப்டம்பர் 15–ந்தேதி என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது கடைசி தேதி நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

18ம் தேதி மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்பட்டியல் இதே இணையதளத்தில் வெளியிடப்படும். கலந்தாய்வு விவரம் எஸ்எம்எஸ் மூலம் அனுப்பப்படும். முன்னுரிமை பிரிவினருக்கான கலந்தாய்வு 18, 19ம் தேதிகளிலும் பொது கலந்தாய்வு 23 முதல் 25ம் தேதி வரையும் நடைபெறும். மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள், விருப்ப முள்ள 25 தொழிற்பயிற்சி நிலையம், தொழிற் பிரிவை முன்னுரிமையின்படி தேர்வு செய்யலாம்.

கலந்தாய்வுக்குப் பின் விண்ணப்பதாரர்களின் முன்னுரிமை மற்றும் விருப்பங்களுக்கேற்ப உறுதி செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிலையம், தொழிற் பிரிவுகளுக்கு தற்காலிக சேர்க்கை ஆணை வழங்கப்பட்டு ஆன்லைன் மூலமாக சேர்க்கை கட்டணம் பெறப்பட்டு சேர்க்கை உறுதி செய்யப்படும்.

இது தொடர்பாக சந்தேகங்கள் இருந்தால் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையோ அல்லது 9499055612, 9499055618 ஆகிய செல்போன் எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ரூஃபிட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

(நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு, 2016 விதிகளின் கீழ் கலைப்பில் உள்ளது)

காப்பரேட் அலுவலகம்: நியு பாந்த் பில்டிங், கேரு மதேவ் குருக்கு சந்து எண்.1, ரம்பாவ் கேக்லே மார்க், பைகுல்லா (கிழக்கு), மும்பை 400 033, மகாராஷ்டிரா, இந்தியா

நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு 2016ன் கீழ் சொத்து மின்னணு ஏலம்

ஏலத் தேதி மற்றும் நேரம்: 29 செப்டம்பர், 2020 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை

நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு, 2016 விதிகளின் கீழ் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், மும்பை பிரிவு - I, மும்பையால் நியமிக்கப்பட்ட மெசர்ஸ் ரூஃபிட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் (கலைப்பில்) கலைப்பாளுவலர் திரு. ஜிதேந்தர் ஜெயின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கீழ்க்கண்ட சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது.

விவரங்கள்	படம்	ரிசர்வ் விலை (ரூபாயில்)	எச்சரிக்கை பணவைப்பு (ரூபாயில்)
முத்திரை சட்டம், 1999 பிரிவு 19ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவு எண்.1775857 மற்றும் புலியுடன் கூடிய "ரூஃபிட்" முத்திரை		40,75,000	4,00,000

மேற்கண்ட சொத்து மின்னணு ஏல முறையில் "உள்ளது உள்ளபடி" www.gsplonline.com/ல் விற்பனை செய்யப்படும். அட்டவணையுடன் சொத்து குறித்த விவரங்கள், ரிசர்வ் விலை, திரும்ப வழங்கப்படும் எச்சரிக்கை பண வைப்புத் தொகை (EMD), ஏல அதிகரிப்புத் தொகை மற்றும் விற்பனை தொடர்பான இதர விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மேற்கண்ட இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்கண்ட மின்னணு ஏலத்தில் பங்கேற்க, திரும்பப்பெறக்கூடிய எச்சரிக்கை பண வைப்புத் தொகை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்தப்பட வேண்டும், மேலும் தொடர்புடைய படிவங்கள் செப்டம்பர் 26, 2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மின்னஞ்சல் வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

செப்டம்பர் 25, 2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சொத்து பற்றி விசாரிக்க விரும்புமுள்ள ஏலதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: காந்தி ஆக்ஷனீர்ஸ் பிரைவேட் லிமிடெட் தொலைபேசி எண்: 9820106675. மின்னஞ்சல்: office@gsplonline.com



தந்தை பெரியார் அவர்களின் 142-வது பிறந்த நாள்

நாள்:	நேரம்:	இடம்:
17.9.2020 வியாழக்கிழமை	காலை 10.00 மணி	அண்ணா மேம்பாலம் அருகில், சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்

தந்தை பெரியார் அவர்களின்

திருவுருவச்சிலைக்கு

மாண்புமிகு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள்

மற்றும்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

தனிமனித இடைவெளியைக் கடைப்பிடித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாரியத்தலைவர்கள் பங்கேற்பார்கள்.

இயக்குநர்

செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.

செ.ம.தொ.இ/788/வேமரகலை/2020